 සියලු ම හිමිකම් ඇවිරිණි/All Right Reserved / முழுப் பதிப்புரிமையுடையது

# ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය
# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
# SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION

**இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான**
**இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை– 2020 (II)**

காலம் 03 மணித்தியாலங்கள்

**பொருளாதார மற்றும் சமூகக் கொள்கை (இலங்கை மீதான விசேட கவனத்துடன்) - (14)**

විභාග අංකය
Index No / சுட்டெண்
.......................................

- **ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.**

---

01. அ. இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் சமூக நலனோம்பல் நிகழ்ச்சித்திட்டமொன்றை உதாரணமாகக் கொண்டு, அந்த நிகழ்ச்சித்திட்டம் வறுமை மற்றும் சமூக ஏற்றத்தாழ்வை குறைப்பதற்கு எவ்வாறு பயனுள்ளதாக அமைந்துள்ளது என்பதை சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

    ஆ. இவ்வாறான நலனோம்பல் நிகழ்ச்சித்திட்டங்களின் நிலைபேற்றுத்தன்மையை அதிகரிப்பதற்கும் அவற்றினால் பொருளாதாரத்திற்கு ஏற்படும் நிதிசார் சுமையைக் குறைப்பதற்கும் முன்னெடுக்க முடியுமான நடவடிக்கைகளை விளக்குக. (10 புள்ளிகள்)

02. அ. அரசாங்கத்தின் வரி வருமானத்தை அதிகரிப்பதற்கு இலங்கையில் அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட வரிச் செயன்முறையில் மேற்கொள்ளப்பட்ட இருவகை (02) மாற்றங்களை விளக்குக. (10 புள்ளிகள்)

    ஆ. இலங்கையில் வருமான ஏற்றத்தாழ்வு மற்றும் சமூக ஏற்றத்தாழ்வை குறைப்பதற்கு மேற்கொள்ள முடியுமான சாதகமான வரி சீரமைப்பு முறைகள் குறித்து விபரிக்க. (10 புள்ளிகள்)

03. அ. வேலையின்மை (Unemployment) மற்றும் கீழுழைப்பு (Underemployment) என்பதை உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

    ஆ. இலங்கையின் ஊழியர்படையில் பெண்களின் பங்களிப்பை அதிகரித்துக்கொள்வதற்கு மேற்கொள்ள முடியுமான நடவடிக்கைகள் இரண்டைக் (02) விபரிக்க. (10 புள்ளிகள்)

04. அ. இலங்கையில் பாடசாலைக் கல்வித்திட்டம் மற்றும் அதன் காலப்பகுதி தொடர்பில் அண்மைய காலத்தில் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்கள் இரண்டைக் (02) குறிப்பிட்டு அவற்றின் முக்கியத்துவத்தை சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

    ஆ. அறிவுசார் பொருளாதாரமொன்றுக்கு பரிமாற்றம் அடைவதற்கு இலங்கையின் கல்வித் துறையில் மேற்கொள்ள முடியுமான மறுசீரமைப்புக்கள் இரண்டை (02) விபரிக்க. (10 புள்ளிகள்)

05. அ. இலங்கையின் மானிட அபிவிருத்திக் குறிகாட்டி, பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது உயர் பெறுமானத்தில் காணப்படுவதற்கான காரணிகள் இரண்டை (02) சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ. இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமான ஆரோக்கியமுள்ள சமூகமொன்றை தோற்றுவிப்பதற்கு சுகாதாரத் துறையினால் எவ்வாறு பங்களிப்பு வழங்க முடியும் என்பதை விபரிக்க. (10 புள்ளிகள்)

06. அ. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு விவசாயத் துறையினால் வழங்கப்படும் பங்களிப்பை சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்திற்கு விவசாயத் துறையின் பங்களிப்பை நிலைப்பேற்றுடன் பேணுவதற்கு நடைமுறைப்படுத்த முடியுமான சாதகமான கொள்கைகளை விபரிக்க. (10 புள்ளிகள்)

*********************